**தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை 2010**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்குப்பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர உரிய பதிவேடுகளுக்கு இணங்க இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைய தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நியம இலக்கம் 9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளுடன் காசுப்பாய்ச்சல் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 3 இன் பிரகாரம் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது கணக்குகளில் இறுதிப் பெறுமதி கிட்டிய ரூபாய்க்கு காட்டப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் பணிக்கொடை ஏற்பாடுகளில் முன்னைய ஆண்டிற்குரிய பற்றாக்குறை ஏற்பாட்டுத் தொகையான ரூபா 5,146,604 மூலதன ஒதுக்கீட்டு மீதிக்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டமையால் அத்தொகையினால் மீளாய்வாண்டின் நட்டம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) வங்கியினால் நேரடியாக வரவு வைக்கப்பட்ட ரூபா 3,764 தொகையான வங்கிக் கட்டணத்தையும் ரூபா 127,608 தொகையான கொடுப்பனவுகளையும் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், ரூபா 17,500 ஆன செல்லுபடியற்றதாக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் பெறுவனவாக கணக்கீடு செய்யப்படட்டிருந்தது.

(iii) 2005 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காணப்படும் ரூபா 502,438 ஆன தொங்கல் கணக்கு மீதியையும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படும் ரூபா 2,041 கூட்டுத்தொகையான மீதியினையும் இனங்கண்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 இணக்கம் செய்யப்பட்டிராத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கடன்பட்டோர் மீதி ரூபா 7,483,347 தொகையானதுடன் கடன்பட்டோர் பட்டோலையின் படியான மீதி ரூபா 7,489,218 ஆக இருந்தது. இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ரூபா 5,871 ஐ இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 2,304,720 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத முற்பணத்தினுள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,832,060 தொகையும் ரூபா 1,356,549

கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,271,034 தொகையும் காணப்பட்டது.

(ஆ) ரூபா 2,304,720 தொகையான முற்பணங்கள், ரூபா 7,483,347 தொகையான கடன்பட்டோர் மற்றும் ரூபா 1,356,549 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 5,831,025 தொகையான காசு மற்றும் வங்கி மீதி என்பவற்றின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) செயற்திட்ட நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 316,575 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 3 மாதங்கள் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்க்கப்படாது காணப்பட்டது.

**1.2.5 கணக்காய்விற்காக சான்றுகளின்மை**

ரூபா 33,972,250 ஆன நிலையான சொத்துக்களுக்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகளும் ரூபா 1,289,046 ஆன கொள்வனவுகளை உறுதிப்படுத்துவதற்காக பட்டியல், பொருள் பெறுவனவு குறிப்பு மற்றும் பொருள் போக்குவரத்து குறிப்பு என்பன சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| இலங்கை அரசின் நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் உள்ள |

| | |
|---|---|
| | கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 454(1) | பொது 44 மாதிரியில் பொருளிருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 1983 இன் 12 ஆம் இலக்க சேவை பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | சட்டத்தின் பிரகாரம் 30 நாட்களுக்குள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 476,518 கூட்டுத்தொகையான 3 கொடுப்பனவுகள் ஒரு மாதத்திற்கும் 3 மாதத்திற்கும் இடைப்பட்ட காலவீச்சிலான தாமதம் இடம்பெற்றிருந்தது. |
| 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை (02) ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக ரூபா 126,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் அது தொடர்பான உதிரிப்பாகங்கள் என்பவற்றிற்காக வெவ்வேறாக கணனி நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவிலிருந்தான நிதிசார் விளைவுகள் ரூபா 14,873,999 பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,339,145 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 10,534,854 குறைவடைந்திருந்தது.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வுப் பகுப்பாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மீண்டுவரும் செலவினத்திற்கான மானியம் ரூபா 1,840,000 ஆல் குறைவடைந்திருந்தமையாலும், முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த பணிக்கொடை பற்றாக்குறை நிதிஏற்பாட்டுத் தொகையான ரூபா 5,146,604 தொகையை ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டமையால் நிதி விளைவுகளின் குறைவிற்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக முறையே ரூபா 3,500,000 ரூபா 70,680,000 தொகையான அரச மூலதன மற்றும் மீண்டெழும் நிதிஏற்பாடுகள் சபைக்கு கிடைத்திருந்தது.

(இ) சபையின் மொத்த வருமானம் ரூபா 75,768,824 ஆக இருந்ததுடன் அதில் 93.28% அரசாங்க மானியமாகவும் மிகுதி 6.72% வெளிநாட்டு உதவியாகவும் ஏனைய வருமானமாகவும் இருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சேவை பெறுநர் தொடர்பான விபரங்கள்**

(i) மீளாய்வாண்டில் சபையின் சேவை நிலையங்களிலிருந்து ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொண்ட மொத்த சேவைபெறுவோர்களின் எண்ணிக்கை ரூபா 3,500 ஆக இருந்ததுடன், அதில் 2,313 அதாவது 66% வதிவிட சிகிச்சை பெற்றிருந்தனர்.

(ii) சபையின் சேவை நிலையங்களில் வதிவிட சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தரும் சேவைநாடுனர்களில் 50% இற்கு மேற்பட்ட அளவிலானவர்கள் மீண்டும் மீண்டும் வருகை தரும் பழைய சேவைநாடுனர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.
எடுத்துக்காட்டாக: ஒக்தோபர் மாதம் வரையில் தலங்கம சேவை நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக வருகை தந்த 1079 ஆன சேவைநாடுனர்களில் 61% அதாவது 658 பேர் பழைய சேவை நாடுனர்கள் ஆவர்.

(iii) சிகிச்சை நிலையங்களில் வதிவிட சிகிச்சை பெற்றுக்கொண்ட சேவை நாடுனர்களின் விபரம் பின்வருமாறாகும்.

| | வருகை தந்த சேவைநாடுனர் களின் எண்ணிக்கை | | | தலா ஒரு நலன் பெறுனருக்கான கிரயம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2009 | அதிகரிப்பு(குறைவு) | 2010 | 2009 | அதிகரிப்பு- |
| நவதிகன்தய | 278 | 345 | (67) | 30,919 | 27,778 | 3,141 |
| கொழும்பு(தலங்கம) | 1,074 | 1,188 | (114) | 8,289 | 6,851 | 1,438 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | 414 | 431 | (17) | 20,967 | 20,143 | 824 |
| காலி | 547 | 522 | 25 | 17,701 | 16,681 | 1,020 |
| | ----------- | ----------- | ----------- | --------- | ----------- | --------- |
| மொத்தம் | 2,313 | 2,486 | (173) | 77,876 | 71,453 | 6,423 |
| | ===== | ===== | ===== | ===== | ===== | ===== |

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற சேவைநாடுனர்களின் எண்ணிக்கை 173 அதாவது 6.96% ஆன குறைவொன்றை அவதானித்த போதிலும், மொத்தக் கிரயம் ரூபா 2,495,030 ஆகவும் ஒரு சேவைநாடுனருக்கான கிரயம் ரூபா 6,423 ஆல் அதாவது 8.99% ஆல் அதிகரித்திருந்தது.

- குறைந்த சேவைநாடுனர்கள் கிரயத்தை காண்பிக்கும் தலங்கம சேவை நிலையத்தில் ஒரு சேவைநாடுனருக்கான கிரயமான ரூபா 8,289 உடன் ஒப்பிடும் போது நவதிகந்தய சேவை நிலையத்தில் ஒரு சேவை நாடுனருக்கான கிரயம் ரூபா 22,630 அதாவது 273% இற்கு மேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- தலங்கம சேவை நிலையத்திலேயே கூடுதலான சேவைநாடுனர்கள் வதிவிட சிகிச்சையை பெற்றுக்கொண்டிருந்ததுடன், அது ஏனைய சேவை நிலையங்களுடன் ஒப்பிடும் போது 200% இற்கு மேற்பட்ட அளவில் காணப்பட்டது.

**(ஆ) தேங்காயில் இருந்தான வருமானம்**

மீளாய்வாண்டில் தேங்காய்களிலிருந்தான வருமானம் ரூபா 886,907 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் வருமானமான ரூபா 649,279 உடன் ஒப்பிடும் போது ரூபா 237,628 அதாவது 36.6% ஆல் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தேங்காய்களின் விலை அதிகரித்தமையின் சாதகத்தை சபை பெற்றுக்கொண்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

**2.2.2 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 960,780 தொகையை செயற்திட்ட நோக்கங்களுக்கு முரணாக செலவிடப்பட்டிருந்தன. செயற்திட்ட நிதி பயன்படுத்தப்பட்டாலும் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்நிதியை செயற்திட்டத்திற்கு செலவு வைப்பதாக தலைவர் தெரிவித்திருந்தார்.

(ஆ) வெளிக்கள கடமைக்காக தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கு முரணாக 14 நாட்களுக்காக ரூபா 2,000 வீதம் ரூபா 28,000 நிறுவனத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெவ்வேறான செயற்பாடுகளுக்காக ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக கிடைக்கப் பெற்றிருந்த சகல வருமானங்களையும் சகல செலவினங்களையும் ஒரே காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் ஒவ்வொரு செயற்பாட்டிற்கு கிடைத்த நிதி மற்றும் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எஞ்சிய நிதி என்பவற்றை வெவ்வேறாக அறிந்துகொள்ள முடியாதிருந்தது.

**2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வுபெற்ற பதவியணி அங்கத்தவர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 374,178 ஆன கொடுப்பனவை மேற்கொள்ளும் போது அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 242,368 தொகையான இடர்கடன் மீதி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 25,000 இற்கு மேற்பட்ட சம்பளத்தை பெறுபவர்களிடமிருந்து சம்பளத்தில் முத்திரைக் கட்டணமாக ரூபா 25 மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய போதிலும், வங்கிக்கு அனுப்பப்படும் 7 உத்தியோகத்தர்களிடமிருந்து அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒக்தோபர் மாதம் பதவியணி அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 176,950 ஆன இடர்கடனுக்கான தவணைப் பணத்தை மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிட்டிருக்கவில்லை.

### 2.2.4 பதவியணியினருக்கான கிரயம்

சபையின் மீளாய்வாண்டிற்கான பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | கிரயம் |
|---|---|---|---|
| | | | ரூபா |
| பதவி நிலைத்தரங்கள் | 60 | 41 | 16,766,331 |
| பதவி நிலைத்தரமல்லாத | 101 | 57 | 14,834,835 |
| கனிஷ்ட | 27 | 22 | 4,983,515 |
| | 188 | 120 | 36,584,681 |
| பணிப்பொறுப்பு | | | |
| பதவி நிலைத்தரங்கள் | - | 09 | 244,011 |
| பதவி நிலைத்தரமல்லாத | - | 29 | 1,930,327 |
| கனிஷ்ட | - | 08 | |
| | | 46 | 2,174,338 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட முகாமையாளர்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்ததுடன், உள்ளபடியாக 5 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் வெற்றிடங்கள் காணப்படவில்லை. எனினும், அங்கரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கைக்கு முரணாக மேலும் 3 முகாமையாளர்கள் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு

ஒருவருக்கு மாதாந்த சம்பளமாக ரூபா 20,490 வீதம் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் 4 சேவை நிலையங்களில் பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் முதல் முகாமையாளர்களாக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அச்சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த நிரந்தர பதவியணி முகாமையாளர்கள் வேறு கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் 6 மாவட்டங்களில் மாகாண அலுவலகங்களை திறந்து வைத்ததன் பின்னர் சேவை தேவைப்பாடு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டதாக தலைவர் அறிவித்திருந்தார்

(இ) சபையின் உத்தியோகத்தர்கள் தொடர்பான சிரேஷ்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பதவியணி பட்டியல் ஒன்று காணப்படவில்லை.

### 2.2.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

ஐக்கிய நாடுகளின் சிறுவர் மற்றும் கல்வி நிதியத்திலிருந்து பாடசாலை போதைப்பொருள் நிவாரண செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 25,693 மற்றும் உலக சுகாதார அமைப்புச் செயற்திட்ட நிதியத்திலிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 37,757 தொகை என்பவற்றை மீளாய்வாண்டு முழுவதும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு எதிராக கண்டி தொழில் நியாய சபையில் தொடரப்பட்டிருந்த 4 வழக்குகளின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 626,750 கூட்டுத்தொகையான இழப்பீட்டுத் தொகையை செலுத்த நேர்ந்திருந்தது.

(ஆ) முகாமையாளருடன் மூன்று பேர் மட்டும் சேவையில் ஈடுபட்டிருக்கும் அனுராதபுர பிராந்திய அலுவலகத்திற்காக வாடகைக்கு பெற்றுக்கொண்ட வீட்டிற்கு 2009 மே மாதம் முதல் ரூபா 12,000 மாதாந்த வாடகை செலுத்தப்பட்டு வந்ததுடன், 2010 மே மாதம் முதல் வாடகை மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 18,000 மாதாந்தம் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. உரிய திட்டமொன்று இல்லாமல் அலுவலகத்தை வாடகைக்கு எடுத்ததன்

காரணத்தால் 50% இற்கு சமமான ரூபா 48,000 மேலதிகமாக செலவிட நேர்திருந்தது.

**2.2.7 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையிடம் மோட்டார் சைக்கிளொன்று உட்பட 21 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 3 வாகனங்கள் செயற்பாடற்றும் குறைப்பயன்பாடுடையதுமாகக் காணப்பட்டதுடன் ஒரு வாகனத்தைத் திருத்தியமைக்கும் நடவடிக்கைக்காக மீளாய்வாண்டில் ரூபா 281,655 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் பின்னரும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன ஓட்டப்பதிவேடுகளில் வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்படாமல் இருந்ததுடன், உரிய மாதாந்த பொழிப்புக்கூற்றுக்களும் எழுதப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக PB-4613 மற்றும் 16-3361 ஆம் இலக்க வாகனங்களின் ஓட்ட மைலோமானி சில சந்தர்ப்பங்களில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.2.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

(i) அம்பாறை, பேருவல மற்றும் இரத்தினபுரி பிராந்திய அலுவலகங்களுக்காக வீடுகளை வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபா 210,000 தொகை வைப்பாக செலுத்தப்பட்டிருந்தது. அலுவலகத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பதவியணியுடன் ஒப்பிடும் போது அலுவலகத்திற்கான வாடகை அதற்கு ஒப்பீடாக கூடுதலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **அலுவலக பிராந்தியம்** | **மாதாந்த வாடகை** | **வைப்புத் தொகை** | **பதவியணி எண்ணிக்கை** |
|---|---|---|---|
| அம்பாறை | ரூபா | ரூபா | |
| பேருவளை | 10,000 | 30,000 | 02 |
| இரத்தினபுரி | 14,000 | 84,000 | 01 |
| | 16,000 | 96,000 | 03 |
| மொத்தம் | | 210,000 | |

(ii) இதற்கு மேலாக அம்பாறை பிராந்திய அலுவலகத்தின் ஆரம்ப விழாவிற்காக ரூபா 10,000 உம் அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 93,150 உம் செலவிடப்பட்டிருந்ததுடன், 2011 பெப்ரவரி மாதம் அலுவலகம் மூடப்பட்டிருந்தது.

**2.2.9 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்திட்டம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் கூட்டுத்திட்டம் 5 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிறுவனத்திடம் காணப்படும் பலம், பலவீனங்கள் சந்தர்ப்பங்கள் தடைகள் தொடர்பாக வெவ்வேறாக இனங்கண்டு நிறுவனத்திடமுள்ள வளங்களை உச்சஅளவில் பயன்படுத்துவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2003 மார்ச் 03 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு 4 சுற்றுக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டின் போது 2 சுற்றுக் கூட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன. அக்கூட்டங்களின் போது போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படாததுடன், 2009 யூன் 19 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009/01 சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கணக்காய்வுப் பகுதியின் பிரதிநிதி ஒருவர் இருக்கவில்லை.

**2.2.11 ஆண்டறிக்கையை பிரசுரித்தல்**

2006 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை உரிய அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன், 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகளை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.12 உள்ளகக் கணக்காய்வு**

சபையினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், குறித்த அமைச்சின் உள்ளகப் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரத்திற்கு

சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. மேலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு விநியோகித்த எவ்வித அறிக்கையின் பிரதியொன்று அரச கணக்காய்வுப் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.13 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையே 2.72% முதல் 374% வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. ஆகையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலைய பயன்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துப் பயன்பாடு

(உ) இருப்புக் கட்டுப்பாடு